பக்கங்கள்:-16

# காலை முரசு

முழக்கம்: 01 | வள்ளுவர் ஆண்டு 2054 | புரட்டாதி 09 | செவ்வாய்க்கிழமை | 26.09.2023 | அதிர்வு 56

## சுகாதார அமைச்சு முன்பாக தாதியர் இன்று போராட்டம்

சுகாதார அமைச்சுக்கு முன்பாக இன்று கவனயீர்ப்புப் போராட்டத்தை முன்னெடுக்கவுள்ளதாக அகில இலங்கை தாதியர் சங்கம் தெரிவித்துள்ளது.

தாதியர்களின் யாப்பில் இரகசியமாகத் திருத்தங்கள் மேற்கொள்ளப் 03▶




# தரணியெங்கும் இன்று திலீபன் நினைவேந்தல்

## பிரதான நிகழ்வு நல்லூர் நினைவாலயத்தில்

தியாக தீபம் திலீபனின் 36ஆம் ஆண்டு நினைவேந்தல் வாரத்தின் இறுதி நாள் நிகழ்வு இன்று தமிழர் தாயகமெங்கும், தமிழர்கள் புலம் பெயர்ந்து வாழும் தேசமெங்கும் உணர் வெழுச்சியுடன் நடைபெறவுள்ளது.

பிரதானநிகழ்வுயாழ்ப்பாணம்-நல்லூரில் அமைந்துள்ள தியாக தீபம் திலீபனின் நினைவாலயத்தில் இடம்பெறவுள்ளது. 02▶

## புலிகளின் தங்கத்தைத் தேடி முள்ளிவாய்க்காலில் வேட்டை



– முல்லைத்தீவு நிருபர் –

தமிழீழ விடுதலைப்புலிகளால் புதைக்கப்பட்ட ஆயுதங்கள், தங்க நகைகள் இருக்கின்றன என்று தெரிவித்து முள்ளிவாய்க்கால் மேற்குப் பகுதியில் அகழ்வுப் பணி நேற்று முன்னெடுக்கப்பட்டது.

முல்லைத்தீவு நீதிவான் 03▶

## திலீபனின் தியாகம் அதி உன்னதமானது

### ஓரணியில் நின்று நினைவேந்த வேண்டும் என்கிறார் சம்பந்தன்



– சீ.ஏ. தமிழ்மாறன் –

தியாக தீபம் திலீபனின் உண்ணாவிரதப் போராட்டம் அதி உன்னதமானது 03▶

### தியாகியின் நினைவேந்தலையொட்டி

## பல்கலைக்கழக மாணவர்களால் மரக்கன்றுகள் வழங்கி வைப்பு



– எஸ்.நிதர்ஷன் –

தியாக தீபம் திலீபனின் நினைவேந்தலையொட்டி யாழ்ப்பாணம் பல்கலைக்கழக மாணவர்களால் மரக்கன்றுகள் வழங்கி வைக்கப் பட்டன.

தியாகி திலீபனின் 36ஆம் ஆண்டு நினைவேந்தல் 03▶




ஈஸ்டர் குண்டுத் தாக்குதல் விடயங்களை ஒட்டி சுவிஸில் இருந்தபடி பிள்ளையானின் முன்னாள் செயலாளர் ஆஸாத் மௌலானா கொளுத்திப் போட்டிருக்கும் வெடிகள் இப்போது வெறும் ஆரம்பம்தான் என்கின்றன விடயம் அறிந்த வட்டாரங்கள்.

மேலும் அதீத பரபரப்பு ஏற்படுத்தும் விடயங்கள் இனித்தான் விலாவாரியாக வரவிருக்கின்றன. அவை வரும் 02▶

## இரகசியம் பரகசியம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

போது பெரும் அரசியல் பூகம்பமே வெடிக்கும் என்று நம்பப்படுகின்றது.

உண்மையில் ஆஸாத் மௌலானாவின் பக்கச் செய்திகள், தகவல்கள், இரகசியங்கள் ஒழுங்காக – விளக்கமாக – முழுமையாக – வெளிவரவில்லை

அவரது வாக்குமூலத்தில் ஆங்காங்கே சில துண்டுகளை வெட்டிப் பொறுக்கி எடுத்து, 'சனல்4' தன் ஆவணப்படத்தில் காணொலியாக வெளியிட்டிருக்கின்றது. எனினும், அது இந்த விடயத்தில் உண்மைப் பக்கங்கள் குறித்த ஒரு தேடுதலுக்கு வழி செய்திருக்கின்றது என்பது நிஜம்.

ஆஸாத் மௌலானாவின் விடயங்களை சுவிஸ் மட்டத்தில் கையாளும் மனித உரிமைகள் அலுவலர் ஒருவரின் ஏற்பாட்டில் ஆஸத் மௌலானா இலங்கையில் உள்ள மூத்த சட்டத்துறை வட்டாரம் ஒன்றுடன் இரண்டொரு தினங்களுக்கு முன்னர் நீண்ட நேரம் தொலைபேசி மூலம் தமிழில் உரையாடியிருக்கின்றார் என்பதை மிக நம்பிக்கையாக அறிய முடிந்தது.

"உங்களுக்குத் தெரிந்த – நீங்களும் சம்பந்தப்பட்ட – உண்மைகளை மட்டும் பேசுங்கள். விடயங்களை விளக்கமாக முன் வையுங்கள். உங்களுக்குத் தெரிந்த மொழியில், சரியான சொல்லாடலில் அதைப் பதியுங்கள். பின்னர் தேவையானால் மொழிபெயர்த்து ஆங்கிலத்தில் அதனை கூறலாம். அவசரப்பட்டு ஆங்கிலத்தில் கூறுவதற்காக குழப்பமான சொல்லாடல்களில் விடயங்களை ஒப்புவித்து, தவறான கருத்துக்கள் எழுவதற்கு வழி செய்து விடாதீர்கள்!" – என்று அந்த சட்ட ஜாம்பவான் தமிழில் சட்ட ஆலோசனை வழங்கி இருக்கின்றார்.

"எந்தக் காரணம் கொண்டும் உண்மை தவிர்ந்த ஒன்றைப் பேசாதீர்கள். பேசினால் உங்களின் மற்றைய கூற்றுக்கள் எல்லாமே கூடப் பொய்யாகிவிடும்" – என்று அட்வைஸ் கொடுத்திருக்கிறார் அவர்.

ஆஸாத் மௌலானாவுடன் உரையாடிய போது அவர் வெளியிட்ட தகவலின் அதிர்ச்சியில் இருந்து அந்த வட்டாரம் இன்னும் மீளவில்லை என்பதை உணர்ந்தேன். அதற்கும் காரணம் உண்டு. அத்தகைய அதிர்ச்சித் தகவலை அவரிடம் கூறியிருக்கின்றார் ஆஸாத் மௌலானா.

கோட்டாபய ராஜபக்ஷ பதவிக்கு வந்த பின்னரும் தொடர்ந்து சுமார் ஒரு வருட காலம் விளக்கமறியலில் இருந்தார் பிள்ளையான். அதனால் சிறையில் அவர் இருந்தார் என்றும் கூறப்படுகின்றது. அந்த காலகட்டத்தில் பிள்ளையானை விடுவிப்பதற்கான நடவடிக்கைகளை சிறையில் சென்று பிள்ளையானை அடிக்கடி சந்தித்து, அவரின் வழிகாட்டல்படி அவற்றை வெளியில் முன்னெடுத்தவர் ஆஸாத் மௌலானாதான். அதனால் தான் அவருக்கு அதிக விடயங்கள், மிக விவரமாகத் தெரிந்திருந்தன என்று நம்பப்படுகிறது.

பிள்ளையானை விடுவிப்பதற்கான உத்தரவை வழங்குவதற்குரிய நீதிபதிகளை அதற்கேற்ப இடம் மாற்றுவதற்கான ஒழுங்கு குறித்து கொழும்பில் நீதித்துறையின் மிக உயர் அலுவலர் ஒருவரை அவரின் உத்தியோகபூர்வ இல்லத்துக்கு, அச்சமயம் அரசின் ஒரு மிக முக்கிய பதவியில் இருந்த அரசியல்வாதியின் சட்டம் சார்ந்த உதவி செயலாளருடன் சென்று சந்தித்துப் பேசினேன் என்று ஆஸாத் மௌலானா கூறிய தகவல் தான் அந்த சட்ட வட்டாரத்தையே பெரும் அதிர்ச்சியில் ஆழ்த்தியிருக்கின்றது.

இத்துணை உயர் மட்டத்தில் நீதித் துறையில் சிறுமைத்தனம் மேற்கொள்ளப்படும் அளவுக்கு நீதித்துறை பங்கப்பட்டு போயிருக்குமானால், அது இனிமேல் வழமைக்கு மீளுவது என்று நம்புவது மிக கஷ்டம் என்பது அவர் கருத்தாக உள்ளது.

கடவுள்தான் இலங்கையின் நீதித் துறையைக் காப்பாற்ற வேண்டும்.

பிரதம நீதியரசர் நெவில் சமரக்கோன், ஷிராணி பண்டாரநாயக்கா போன்றோர் தனித்துவத்தோடு இருந்த கதிரையில் தாங்களும் இருந்தனர் என்று கூறும் ஒரு சிலரை பற்றி இரண்டொரு தினங்களுக்கு முன்னால் இப்பத்தியில் பிரஸ்தாபித்திருந்தேன். அது சரியான கூற்றுத் தான்.

\+ + +

நேற்றைய எனது பத்தியில் ஓர் இலக்க அச்சுப் பிழை. அதைத் திருத்துவது எனது கடமை.

தியாக தீபம் திலீபனின் உடலத்துக்கு என்ன நேர்ந்தது என்பதைக் குறிப்பிடும்போது –

"2000-04-21 அன்று மாத்தளன் பகுதியை இராணுவம் கைப்பற்றிய போது அதன் அருகே ஓர் இடத்தில் அது மண்ணில் விதைக்கப்பட்டது." – என்று அச்சாகியிருந்தது.

அது தவறு. 2000 ஆண்டு என்பது 2009 என்று பதிவாகியிருக்க வேண்டும். வாசகர்கள் இதனைக் கவனத்தில் கொள்வார்களாக!.

## தரணியெங்கும் இன்று...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

இராசையா பார்த்தீபன் என்ற இயற் பெயர் கொண்ட திலீபன், தமிழ் மக்களின் விடுதலைக்காக இந்தியப் படைகளுக்கு எதிரான உண்ணாவிரதப் போராட்டத்தை 1987ஆம் ஆண்டு நடத்தினார். செப்டெம்பர் மாதம் 15ஆம் திகதி ஆரம்பமான உண்ணாவிரதப் போராட்டம், 12 நாட்களின் பின்னர் செப்டெம்பர் மாதம் 26ஆம் திகதி திலீபனின் வீரச்சாவுடன் முடிவுக்கு வந்தது.

ஈழத்தமிழ் மக்களின் விடுதலைப் போராட்ட வரலாற்றில் அகிம்சை வழிப் போராட்ட வழிகள் தோல்வியடைந்த காரணத்தால் ஆயுத வழிப்போராட்டம் ஆரம்பமானது. இந்த ஆயுதப் போராட்ட வழியில் முக்கிய இடம் வகித்தவர்களில் ஒருவரான திலீபன் ஆயுதப் போராட்டத்தை மட்டுமல்ல, அகிம்சை வழிப் போராட்டத்தையும் நடத்த முடியும் என உலகுக்கு எடுத்துக் காட்டியவர்.

யாழ்ப்பாணத்தில் ஊரெழு எனும் கிராமத்தில் ஆசிரியர் இராசையா தம்பதியினருக்கு நான்காவது கடைக்குட்டி மகனாக 1963ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 27ஆம் திகதி பார்த்தீபன் பிறந்தார்.

யாழ். பல்கலைக்கழகத்தில் மருத்துவ பீட மாணவனாக கல்வி கற்றுக்கொண்டிருக்கையில் விடுதலைத் தாகம்கொண்டு, தமிழீழ விடுதலைப்புலிகளின் தலைவர் பிரபாகரனைத் தலைவராக ஏற்று தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்கத்தில் திலீபன் என்ற பெயரில் அவர் சேர்ந்தார்.

ஆயுதப் போராட்டம் உச்சநிலையை அடைந்திருந்த நிலையில் சமாதானப் படை என்ற போர்வையில் இந்திய இராணுவம் தமிழ்ப் பகுதிகளில் நுழைந்தது. பின்னர் இலங்கை இராணுவத்துடன் சேர்ந்து, தமிழர் தாயகப் பகுதிகளில் ஆக்கிரமிப்பு நடவடிக்கைகளையும் அத்துமீறல் நடவடிக்கைகளையும் மேற்கொண்டது.

இதனைக் கண்டித்து திலீபன் 1987ஆம் ஆண்டு செப்டெம்பர் மாதம் 15ஆம் திகதி ஐந்து கோரிக்கைகளை முன்வைத்து உண்ணாவிரதப் போராட்டத்தில் குதித்தார்.

1) பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் தொடர்ந்தும் தடுப்புக்காவலில் அல்லது சிறைகளில் உள்ளோர் விடுவிக்கப்படல் வேண்டும்.

2) புனர்வாழ்வு என்ற பெயரில் தமிழர் தாயகத்தில் நடத்தப்படும் சிங்கள குடியேற்றங்கள் உடனடியாக நிறுத்தப்படல் வேண்டும்.

3) இடைக்கால அரசு நிறுவப்படும் வரை புனர்வாழ்வு என்று அழைக்கப்படும் சகல செயற்பாடுகளும் நிறுத்தப்படல் வேண்டும்.

4) வடக்கு, கிழக்கு மாகாணங்களில் பொலிஸ் நிலையங்கள் திறக்கப்படுவது உடனடியாக நிறுத்தப்படல் வேண்டும்.

5) இந்திய அமைதிப்படையின் மேற்பார்வையில் ஊர்காவற்படை என அழைக்கப்படுவோருக்கு வழங்கப்பெற்ற ஆயுதங்கள் உடனடியாகத் திரும்பப் பெறப்பட்டு தமிழ்க் கிராமங்கள், பள்ளிக்கூடங்களில் குடிகொண்டுள்ள இராணுவ, பொலிஸ் நிலையங்கள் மூடப்படவேண்டும்.

– ஆகிய கோரிக்கைகளேயே திலீபன் முன்வைத்தார்.

"கோரிக்கைகள் நிறைவேற்றப்படும் வரை தண்ணீரும் அருந்தப்போவதில்லை" என்று அறிவித்த அவர், அந்தக் கோரிக்கைகளை இந்திய அரசு நிறைவேற்றாததால் பன்னிரண்டாம் நாள் (26.09.1987) காலை 10.58 மணிக்கு வீரமரணமடைந்தார்.

"மக்கள் புரட்சி வெடிக்கட்டும்! சுதந்திர தமிழீழம் மலரட்டும்!!" என்று முழக்கமிட்டு தாயக மண்ணை முத்தமிட்டு வீரகாவியம் படைத்த தியாக தீபம் திலீபனின் நினைவேந்தல் வாரத்தின் இறுதி நாள் நிகழ்வு தரணியெங்கும் இன்று உணர்வெழுச்சியுடன் நடைபெறவுள்ளது.

பிரதான நிகழ்வு யாழ்ப்பாணம் – நல்லூரில் அமைந்துள்ள தியாக தீபம் திலீபன் நினைவாலயத்தில் இடம்பெறவுள்ளது என்று திலீபன் நினைவேந்தல் ஏற்பாட்டுக் குழு அறிவித்துள்ளது.

அதன் பிரகாரம் இன்று காலை 7.30 மணிக்கு ஊரெழுவிலிருந்து கிட்டு பூங்கா நோக்கி ஊர்திப் பேரணி ஆரம்பமாகி தொடர்ந்து காலை 8 மணிக்குக் கிட்டு பூங்காவிலிருந்து நல்லூரில் அமைந்துள்ள தியாக தீபம் திலீபன் நினைவாலயம் நோக்கி நடை பவனி ஆரம்பமாகும்.

அதேவேளை, தியாக தீபம் உண்ணாவிரதமிருந்து உயிர்நீத்த நேரமான காலை 10.48 மணிக்கு அவர் உண்ணாவிரதமிருந்த நல்லூரின் வீதியிலும், நினைவாலயத்திலிலும் சமநேரத்தில் மாவீரர்களின் பெற்றோரால் ஈகச்சுடர் ஏற்றப்பட்டு மலர் மாலை அணிவிக்கப்படும். அதனைத் தொடர்ந்து மலர் வணக்கம் நடைபெறும்.

இந்த நினைவேந்தல் நிகழ்வில் கட்சி பேதமின்றி அனைவரும் பங்குகொண்டு தியாக தீபத்தை நினைவேந்திடுமாறு ஏற்பாட்டுக் குழு கேட்டுக்கொண்டுள்ளது.

நினைவேந்தல் நிகழ்வுக்காக இன்று காலை 7 மணி தொடக்கம் நண்பகல் 12 மணி வரை பருத்தித்துறை வீதி மூடப்படும் எனவும், அந்த வழியால் பயணம் செய்பவர்கள் மாற்று வழிகளைப் பயன்படுத்துமாறும் ஏற்பாட்டுக்குழு அறிவித்துள்ளது.

# பிரதி பொலிஸ் மா அதிபருக்கு 5 வருடச் சிறைத் தண்டனை!

இராஜாங்க அமைச்சர் பிரேமலால் ஜயசேகரவை, கைது செய்ய வேண்டாம் என அழுத்தம் கொடுத்த குற்றத்திற்காக சபரகமுவ மாகாண முன்னாள் சிரேஷ்ட பிரதி பொலிஸ் மா அதிபர் லலித் ஜய சிங்கவுக்கு சிறைத் தண்டனை விதிக் கப்பட்டுள்ளது.

இரத்தினபுரி மேல் நீதிமன்றம் அவ ருக்கு 5 வருடச் சிறைத் தண்டனை விதித்து தீர்ப்பளித்துள்ளது.

அத்துடன், 20 ஆயிரம் ரூபாவை அபராதமாக செலுத்த வேண்டும் எனவும் மேல் நீதிமன்ற நீதிபதி உத்தர விட்டுள்ளார்.

2015 ஆம் ஆண்டு ஜனாதிபதி தேர்தல் காலப்பகுதியில் கஹவத்த பகுதியில் இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத் தில் ஒருவர் கொல்லப்பட்டார். பலர் காயமடைந்திருந்தனர்.

இந்த சம்பவம் தொடர்பில் விசாரணை களை முன்னெடுத்த கஹவத்த பொலி ஸார், அந்த காலப்பகுதியில் பிரதிய மைச்சராக இருந்த பிரேமலால் ஜயசேக ரவை கைது செய்ய நடவடிக்கை எடுத் திருந்தனர்.

இந்த நிலையில், அவரைக் கைது செய்ய வேண்டாமென கஹவத்தை பொலிஸ் நிலையத்தின் அப்போதைய பொறுப்பதிகாரி லலித் ராஜமந்திரிக்கு அழுத்தம் கொடுத்தார் என்று சபரகமுவ மாகாண முன்னாள் சிரேஷ்ட பிரதி பொலிஸ் மா அதிபர் லலித் ஜயசிங்கவுக்கு எதிராக வழக்கு தாக்கல் செய்யப்பட்டது.

## திலீபனின் தியாகம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் தெரிவித்தார்.

அவர் மேலும் கூறுகையில்,

"தமிழ் மக்களின் விடுதலைக்காக பல்வேறு அகிம்சைப் போராட்டங்கள் இடம்பெற்றுள்ளன. அதில் தியாக தீபம் திலீபனின் அகிம்சைப் போராட்டம் – உண்ணாவிரதப் போராட்டம் அதி உன்னதமானது.

திலீபனின் தியாகத்தை எவரும் கொச்சைப்படுத்த முடியாது. நினைவேந் தல் நிகழ்வுக்கு எவரும் தடை போட முடியாது.

தமிழர்கள் அனைவரும் கட்சி பேத மின்றி ஓரணியில் நின்று திலீபனை நினைவேந்த வேண்டும்." – என்றார்.

## புலிகளின் தங்கத்தைத்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

தர்மலிங்கம் பிரதீபன் முன்னிலையில் இந்த அகழ்வுப் பணி நடைபெற்றது.

பொலிஸ் புலனாய்வுப் பிரிவினருக்குக் கிடைத்த இரகசியத் தகவலுக்கு அமைய நீதிமன்ற அனுமதியைப் பெற்று நேற்றுப் பிற்பகல் 2.30 மணியளவில் அகழ்வுப் பணி ஆரம்பமாகி இடம்பெற்றது.

பொலிஸார், விசேட அதிரடிப் படை யினர், இராணுவத்தினர், கிராம சேவை யாளர், தொல்லியல் திணைக்களத்தி னர், சுகாதாரப் பிரிவினர், தடயவியல் பொலிஸார் முன்னிலையில் அகழ்வுப் பணி நடைபெற்றது.

நேற்றைய அகழ்வுப் பணியின்போது சில தகரங்கள் மாத்திரம் அகழ்ந்தெடுக்கப் பட்டிருந்தன. அத்துடன் அகழ்வுப் பணி நிறைவுக்கு வந்தது.

அந்தப் பகுதியில் இன்றும் அகழ்வுப் பணி முன்னெடுக்கப்படும் என்று அறிவிக் கப்பட்டுள்ளது.

## சுகாதார அமைச்சு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

பட்டன

எனக் கூறப்படும் நடவடிக்கைக்கு எதிராகவே இந்தப் போராட்டத்தை தாதியர் சங்கத்தினர் மேற்கொள்ளவுள்ளனர்.

இது தொடர்பில் அகில இலங்கை தாதியார் சங்கத்தின் தலைவர் எஸ்.பி. மெடிவத்த கருத்துத் தெரிவிக்கையில்,

"தாதியர் பற்றாக்குறையால் வைத்தி யசாலைகளில் ஏற்பட்டுள்ள நெருக்கடிக் குத் தீர்வு காண வேண்டிய நிலையில், அதிகாரிகள் தாதியர் யாப்பில் திருத் தங்களை மேற்கொள்ளும் வரைவை இரகசியமாகத் தயாரித்துள்ளனர். அந்த நடவடிக்கை உடனடியாகக் கைவிடப்பட வேண்டும்." – என்றார்.

# நிகழ்நிலை பாதுகாப்பு சட்டமூலம் மிக மோசமானது பாரதூரமானது!

## ஜோசப் ஸ்டாலின் எச்சரிக்கை

அலைவரிசைகளை கட்டுப்படுத்தும் நிகழ்நிலை பாதுகாப்பு சட்டமூலம் மிகவும் பாரதூரமானது, மிக மோசமானது என இலங்கை ஆசிரியர் சங்கத்தின் பொதுச் செயலாளர் ஜோசப் ஸ்டாலின் தெரி வித்துள்ளார்.

கொழும்பில் இடம்பெற்ற ஊடக சந் திப்பின்போதே அவர் இவ்வாறு தெரிவித் தார். இதன்போது ஜோசப் ஸ்டாலின் மேலும் தெரிவிக்கையில் –

இந்தச் சட்ட மூலம் இணையம் ஊடாக தகவல்களைப் பரிமாறிக்கொள்ளும் போது அந்தத் தகவல் சரியானதா அல்லது அதனால் ஏற்படும் பாரபட்சம் குறித்து தீர்மானிக்கும் அதிகாரத்தை ஜனாதிபதிக்கு வழங்குகிறது

கருத்துகளை வெளிப்படுத்தும் உரிமை, அரசமைப்பு நமக்கு அளித் துள்ள உரிமை. தகவல் அறியும் உரிமை, பேச்சு சுதந்திரம் ஆகியவற்றை அழிக் கவே இந்தச் செயற்பாடுகள் செய்யப்ப டுகின்றன.

# பதுளையில் தீப்பரவல் 8 வீடுகளுக்குப் பாதிப்பு

பதுளை – மாப்பாகலை பகுதியில் உள்ள நெடுங்குடியிருப்பு ஒன்றில் நேற்று இரவு தீப்பரவல் ஏற்பட்டது.

இந்த தீப்பவரலில் 8 வீடுகளுக்கு பாதிப்புகள் ஏற்பட்டுள்ளன எனத் தெரி விக்கப்படுகிறது.

இந்த பகுதிக்கு தீயணைப்பு பிரிவினர் அனுப்பி வைக்கப்பட்டிருந்தனர்.

இதேவேளை, தீப்பரவலுக்கான காரணம் உடனடியாகத் தெரியவர வில்லை.

## பாதாளக் குழுக்களின் மோதலில்

# சுட்டுக் கொல்லப்பட்ட வர்த்தகருக்கு கோட்டாபய நேற்று நேரில் அஞ்சலி

இரண்டு பாதாள உலகக் கும்பல்களுக் கிடையிலான மோதலினால் காலி யில் சுட்டுக் கொல்லப்பட்ட கோடீஸ்வர வர்த்தகர் லலித் வசந்த மெண்டிஸின் உடலுக்கு இறுதி அஞ்சலி செலுத்து வதற்காக முன்னாள் ஜனாதிபதி கோட் டாபய ராஜபக்ஷ நேற்றுப் பிற்பகல் சென்றுள்ளார்.

பலத்த பாதுகாப்புக்கு மத்தியில் முன்னாள் ஜனாதிபதி இறுதி அஞ்சலி செலுத்தியிருந்தார்.

இரண்டு பாதாள உலகக் கும்பல்களுக் கிடையிலான மோதல் காரணமாக, கடந்த சனிக்கிழமை காலி டிக்சன் சந்தி யில் வைத்து இந்த வர்த்தகர் சுட்டுக் கொல் லப்பட்டார்.

இவர் லலித் வசந்த மெண்டிஸ் இரா ஜாங்க அமைச்சர் டி.வி.சானக்காவின் மாமனார் ஆவார் என்பதும் குறிப்பிடத் தக்கது.

## பல்கலைக்கழக...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

வாரம் தாயகமெங்கும் உணர்ச்சியு டன் நடைபெற்று வரும் நிலையில் யாழ். பல்கலைக்கழக மாணவர்களின் ஏற்பாட் டில் நேற்று மரக்கன்றுகள் வழங்கி வைக் கப்பட்டன.

அதன்போது, யாழ். நகர் பகுதி, மரு தனார்மடம் சந்தை பகுதி மற்றும் நல்லூர் தியாக தீபம் திலீபன் நினைவுத்தூபி அமைந்துள்ள பகுதிகளில் பொதுமக்க ளுக்கு மரக்கன்றுகள் வழங்கி வைக்கப் பட்டன.

# தந்தையைக் கடுமையாகத் தாக்கிய பொலிஸ் சார்ஜன்டான மகள் கைது!

காணித் தகராறு தொடர்பான சர்ச்சை தீவிரமடைந்ததை அடுத்து, தனது தந்தையைத் தாக்கினார் எனக் கூறப்படும் பெண் பொலிஸ் சார்ஜன்ட் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார் என்று ஹங்கல்ல பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

பேருவளை பொலிஸில் கடமையாற்றும் சார்ஜன்டே சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டுள்ளார்.

பொலிஸ் சார்ஜன்டாக உள்ள தனது மகள் தன்னைத் தாக்கினார் என்று அ/ஹங்கல்ல பொலிஸில் தந்தை முறைப்பாடு செய்துள்ளார்.

முறைப்பாட்டின் பிரகாரம், பொலிஸ் சார்ஜன்டான மகளும், முறைப்பாட்டாளரின் தந்தையும் பொலிஸ் நிலையத்துக்கு அழைக்கப்பட்டு விசாரிக்கப்பட்டபோதும் இருவரும் சமரசம் செய்ய விரும்பவில்லை என்றும், இதையடுத்து பெண் பொலிஸ் சார்ஜன்ட் கைது செய்யப்பட்டுள்ளார் என்றும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

# இரட்டைக் குழந்தைகள் உயிரிழப்பு; அமைச்சு மட்ட விசாரணை ஆரம்பம்

களுபோவில வைத்தியசாலையில் குறை மாதத்தில் பிறந்த குழந்தைகளுக்கான பிரிவில் சிகிச்சை பெற்று வந்த இரட்டைக் குழந்தைகள் உயிரிழந்தமை தொடர்பான விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன என சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

இதற்கான விசாரணைகளை முன்னெடுப்பதற்காக விசேட அதிகாரியொருவர் களுபோவில வைத்தியசாலைக்கு அனுப்பப்பட்டுள்ளார் என பிரதி சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம், வைத்தியர் ஜீ.விஜேசூரிய தெரிவித்துள்ளார்.

இந்த இரட்டை குழந்தைகளின் மரணத்தில் சந்தேகம் நிலவுவதால், அது தொடர்பில் பெற்றோரால் வைத்தியசாலை பணிப்பாளரிடம் விசாரணைக்கான கோரிக்கை முன்வைக்கப்பட்டிருந்தது.

சிசுக்களின் மரணம் தொடர்பில் கஸ்பேவ பொலிஸில் முறைப்பாடு

# நீர் கட்டணப் பட்டியல் இனிமேல் இலத்திரனியல் முறைமையின் கீழ்

நீர் கட்டணங்களை இலத்திரனியல் கட்டணப் பட்டியல் முறைமையின் கீழ் விநியோகிக்க தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபை நடவடிக்கை எடுத்துள்ளது.

எதிர்வரும் முதலாம் திகதி முதல் தெரிவு செய்யப்பட்ட 04 இடங்களில் இந்த புதிய முறைமை நடைமுறைப்படுத்தப்படவுள்ளது என அந்தச் சபை தெரிவித்துள்ளது.

அதற்கமைய கொழும்பு தெற்கு, கண்டி தெற்கு, பொலன்னறுவை, திருகோணமலை ஆகிய பிரதேசங்களில் இந்த முறைமை நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

344,697 நீர் வழங்கல் இணைப்புகளில் 326,124 இணைப்புகளுக்கான தொலைபேசி இலக்கங்கள் இலத்திரனியல் கட்டணப் பட்டியல்களுக்காக இது வரை பதிவு செய்யப்பட்டுள்ளன எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

அடுத்த வருடம் ஜனவரி மாதம் முதல் இந்த நடைமுறையை இலங்கையின் அனைத்து பகுதிகளிலும் அமுல்படுத்தவுள்ளது என நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபை மேலும் தெரிவித்துள்ளது.

# யாழ்.பல்கலை உளச்சார்புப் பரீட்சைகளுக்கு விண்ணப்பிப்பதற்கான முடிவுத் திகதி நீடிப்பு

யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத்தில் குறிப்பிட்ட சில கற்கை நெறிகளுக்கு மாணவர்களைத் தெரிவு செய்வதற்காக நடத்தப்படும் சகல உளச்சார்புப் பரீட்சைகளுக்கும் விண்ணப்பிப்பதற்கான முடிவுத் திகதி இம்மாதம் 30 ஆம் திகதி வரை நீடிக்கப்பட்டுள்ளது.

2022ஆம் ஆண்டு நடைபெற்ற ஜி.சீ.ஈ. உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றி பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் பல்கலைக்கழக அகுமதித் தேவைகளைப் பூர்த்தி செய்த மாணவர்களுள் குறிப்பிட்ட கற்கை நெறிகளுக்கான விசே தகுதிகளைக் கொண்டிருக்கும் மாணவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டிருந்தன. அவற்றுக்கான முடிவுத் திகதி கடந்த 21 ஆம் திகதி என அறிவிக்கப்பட்டிருந்தது.

எனினும், மாணவர்கள் பலரது வேண்டுகோளுக்கிணங்க தகுதியான விண்ணப்பதாரிகளிடமிருந்து 30.09. 2023 ஆம் திகதி சனிக்கிழமை நண்பகல் 12 மணிவரை ஏற்றுக்கொள்ளப்படும் என்றும், மேலதிக விவரங்களை www.jfn.ac.lk என்ற இணையத்தளத்தில் பெற்றுக்கொள்ளலாம் எனவும் பல்கலைக்கழகப் பதிவாளர் அறிவித்துள்ளார்.

# இருபது ரயில் இயந்திரங்களை இலங்கைக்கு வழங்கும் இந்தியா

இந்தியா அரசாங்கம் 20 ரயில் இயந்திரங்களை இலங்கைக்கு வழங்கும் என ரயில்வேத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

மின்சார ரயில்களை இயக்குவதற்கு இந்தியா நடவடிக்கை எடுத்து வருகிறது. இந்த நிலையில், சேவையில் இருந்து நீக்கம் செய்யப்படும் இயந்திரங்களை, இலங்கைக்கு வழங்குவதற்கு இந்தியா இணக்கம் தெரிவித்துள்ளது என அந்தத் திணைக்களம் குறிப்பிட்டுள்ளது.

இந்த இயந்திரங்கள், இலங்கையில் இயங்குவதற்கு ஏற்றவையா என்பதைக் கண்டறியும் வகையில், தொழில்நுட்பக் குழுவொன்றை எதிர்வரும் காலங்களில் இந்தியாவுக்கு அனுப்ப ரயில்வேத் திணைக்களம் தீர்மானித்துள்ளது.

இதன்பின்னரே இந்த ரயில் இயந்திரங்களை ஏற்றுக்கொள்வதா அல்லது இல்லையா என்பது குறித்து இறுதி முடிவு எடுக்கப்படும் என்று ரயில்வே திணைக்களம் அறிவித்துள்ளது.

# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்

259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com

## தேசிய எழுச்சியின் வடிவம் திலீபன்

"நான் மரணத்தை மகிழ்வுடனும் பூரண திருப்தியுடனும் தழுவிக் கொள்கிறேன். என் தலைவனின் தலைமையில் அனைத்து மக்களும் கிளர்ந்தெழுவார்கள் என்பதை நான் உறுதியாக நம்புகிறேன். இந்த மாபெரும் மக்கள் புரட்சி என்றோ ஒரு நாள் எம் இலட்சியத்தை நிறைவேற்றியே தீரும். எம் மக்கள் மீது கொண்ட அசையாத நம்பிக்கையின் பேரில், அவர்கள் மீது கொண்ட தளராத பாசத்தின் பேரில், அவர்களின் விடிவுக்காக நான் 651 ஆவது விடுதலைப் புலியாக என் தோழர்களை நோக்கி மெதுவாகப் போய்க் கொண்டிருக்கிறேன்"

- இந்த வாசகங்கள் ஒரு சொட்டு தண்ணீர் கூட அருந்தாமல் 12 நாள்கள் பசி இருந்து, அணு அணுவாக தன்னை வருத்தி, தற்கொடையாக்கிய தியாகி திலீபன் சாவதற்கு சில தினங்களுக்கு முன்னர் தன் கைப்பட எழுதிய ஒப்புதல் வாக்குமூலத்தில் ஒரு பகுதி.

அந்த உத்தம சீலனின் அந்த உயரிய கனவு நனைவாகவில்லை. அவன் தவம் அவமாகிப் போகும் துயரத்தை கண்ணால் காணும் நிலைமை தமிழ் மண்ணுக்கு.

என் மக்கள் மீது கொண்ட அசையாத நம்பிக்கையின் பேரில், அவர்கள் மீது கொண்ட தளராத பாசத்தின் பேரில், அவர்களின் விடிவுக்காக நான் மெல்ல மெல்ல மாவீரர்களுடன் இணைந்து கொண்டிருக்கின்றேன் என்று தியாக தீபம் திலீபன் குறிப்பிட்ட மக்கள் கூட்டத்தைச் சேர்ந்தவர்கள் நாங்கள்தான்.

அவன் அசையாத நம்பிக்கை வைத்த மக்கள் நாங்கள் தான். அவன் தளராத பாசம் கொண்டதும் நம் மீதுதான். எங்கள் விடிவுக்காகத்தான் தன்னை ஆகுதியாக்குவதாக நினைத்து அணுஅணுவாகச் செத்தழிந்தான் அவன்.

அப்படி அந்தத் தியாக தீபம் அசையாத நம்பிக்கையும் தளராத பாசமும் வைக்கும் தகுதி நிலையில் நம் மக்கள் கூட்டம் இருக்கின்றதா என்பதுதான் இன்று அந்தத் தியாகியின் நினைவு தினத்தில் நாம் ஒவ்வொருவரும் நம்மைப் பார்த்து எழுப்ப வேண்டிய கேள்வியாகும்.

திட்டமிட்ட சிங்கள குடியேற்றங்களையும், தமிழர் தாயகத்தை சிங்களமயப்படுத்தும் கபடத் திட்டத்தையும் உலகுக்கு முரசறைந்து, அதைத் தடுத்து நிறுத்துவது அவனின் பிரதான கோரிக்கையாக இருந்தது. அதற்காகவே அவன் தன்னுயிரை பட்டினியுடனும் தீராத் தாகத்துடனும் நோன்பு கிடந்து அர்ப்பணித்தான்.

ஆனால் அந்த நெருக்கடிகள் இன்னும் தொடர்கின்றன. முன்னைய நிலைமையை விட மிக மோசமாகத் தொடர்கின்றன.

அதனைத் தடுத்து நிறுத்துவதற்கு ஒன்றுபட்டு கிளர்ந்தெழுந்து எதிர்க்கத் திராணியற்ற நாங்கள், அந்தத் தியாகியின் நினைவேந்தலை வைத்து அரசியல் தகிடுதத்தங்களை நடத்துகிறோம்.

தியாக தீபம் திலீபன் ஒட்டுமொத்தத் தமிழினத்தின் உரிமைக் கோரிக்கைக்கான எழுச்சியின் அடையாள வடிவம். அதனை கட்சி, குழு, அணி, கன்னை சார்ந்த நிலைப்பாடாக மாற்றி, அரசியல் சாக்கடைத்தனம் பண்ணுகிறோம்.

திலீபனின் வியாபித்த - விரிந்த - பரந்த - தமிழ்த் தேசிய சிந்தனை புரியாதவர்கள், அரசியல் சுயலாபங்களுக்கு நடத்தும் நாடகங்கள் அவன் ஏற்படுத்திய உணர்வெழுச்சியின் உண்மை வடிவத்தை மறைத்து நிற்பது நம் துரதிஷ்டமே.

# இரு பஸ்கள் மோதி விபத்து 12 பேர் வைத்தியசாலையில்

கொழும்பு – கண்டி பிரதான வீதியின் வேவல்தெனிய – தித்தவெல்மங்கட சந்தியில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த பஸ் ஒன்றின் மீது மற்றொரு பஸ், நேருக்கு நேர் மோதி விபத்துக்குள்ளாகியுள்ளது.

இந்த விபத்தில் காயமடைந்த 12 பேர் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

நேற்று அதிகாலை 3.45 மணியளவில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது என்று பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

அந்தப் பகுதியில் நிறுத்தப்பட்டிருந்த பஸ்ஸின் மீது வெலிமடையில் இருந்து கொழும்பு நோக்கிப் பயணித்த பஸ்ஸே இவ்வாறு நேருக்கு நேர் மோதி விபத்துக்குள்ளாகியுள்ளது என்றும் பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர்.

# மீளவும் சு.கவில் இணைய தயாராகும் 16 எம்.பிக்கள்!

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியில் இருந்து விலகி ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவில் இணைந்து கொண்ட 16 நாடாளுமன்ற உறுப்பினர்கள் மீண்டும் கட்சியில் இணைவது தொடர்பாக அந்தக் கட்சியின் தலைவரான முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுடன் கலந்துரையாடல் ஒன்று இடம்பெற்றுள்ளது.

ஹெக்டர் கொப்பேகடுவ மாவத்தையில் உள்ள முன்னாள் ஜனாதிபதியின் உத்தியோகபூர்வ இல்லத்தில் இந்தக் கலந்துரையாடல் நடைபெற்றுள்ளது.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் முன்னாள் உறுப்பினரும் நாடாளுமன்ற உறுப்பினருமான அனுர பிரியதர்ஷன யாப்பா, ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் முன்னாள் பொதுச் செயலாளரும் அமைச்சருமான சுசில் பிரேமஜயந்த, அமைச்சர் நளின் பெர்னாண்டோ உள்ளிட்ட ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவில் இருந்து நாடாளுமன்றத்துக்குத் தெரிவான 16 பேர் இந்தக் கலந்துரையாடலில் பங்கேற்றுள்ளனர்.

சுதந்திரக் கட்சியின் உறுப்பினர்களான அமைச்சர் மஹிந்த அமரவீர, இராஜாங்க அமைச்சர்களான லசந்த அழகியவண்ண, ஜகத் புஸ்பகுமார மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர் துமிந்த திஸாநாயக்க, ஆகியோரும் முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுடன் இடம்பெற்ற குறித்த கலந்துரையாடலில் பங்கேற்றுள்ளனர்.

சுமார் இரண்டு மணித்தியாலங்கள் நடைபெற்ற இந்தக் கலந்துரையாடலில் குறித்த 16 பேரும் மீண்டும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியில் இணைவது தொடர்பில் நீண்ட நேரம் பேசியுள்ளனர் என்று தெரிவிக்கப்படுகின்றது.

# மேல் மாகாணத்தில் வாகன வரி அறவீடு சேவை இடைநிறுத்தம்




மேல் மாகாணத்தில் வாகன வரிப் பத்திரம் விநியோகிக்கும் நடவடிக்கையை இடைநிறுத்தத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இதற்கான கணினி கட்டமைப்பில் மேற்கொள்ளப்படவுள்ள மேம்படுத்தல் செயற்பாடுகளின் காரணமாக இந்த தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

அதற்கமைய, நாளை முதல் எதிர்வரும் ஒக்டோபர் 2 ஆம் திகதி வரை வாகன வரிப் பத்திரம் விநியோகிக்கும் நடவடிக்கை தற்காலிகமாக இடைநிறுத்தப்படவுள்ளது என மாகாண வீதி போக்குவரத்து அமைச்சு தெரிவித்துள்ளது.

# தியாக தீபம் திலீபனின் அசைபோடும் நினைவு




– பவன் –

சாதாரணமாக இன்றைய காலத்தில் ஒரு 23 வயது இளைஞருக்கு எந்த அளவுக்குப் பொறுப்புகள், சமூகக் கடமைகள் தொடர்பான தெளிவு, சமூகப் பொறுப்பு என்பது இருக்கும் என்று தெரியாது.

கிட்டத்தட்ட இந்த நவீன காலத்தில் 23 வயதுடைய ஒருவர் ஒரு மாணவராக அல்லது ஒரு தொழில் செய்யும் ஆரம்ப நிலையில் இருக்கலாம்.

ஆனால், கடந்த 36 வருடங்களுக்கு முன்னர் ஒரு 23 வயதுடைய யாழ். பல்கலைக்கழக மருத்துவபீட மாணவன் இந்த உலகத்தைத் திரும்பிப் பார்க்க வைத்தார்.

தனது தாய் நாடு மீதான அவரது கனவும், அவாவும், விடுதலை வேட்கையும் அத்தனைப் பெரியது. நினைத்துக் கூட பார்க்க முடியாத அளவுக்கு அவரது தியாகம் விலைமதிப்பற்ற ஒன்றாக இருந்திருக்கின்றது.

ஆம்... தியாக தீபம் திலீபன்தான் அவர். இராசையா பார்த்தீபன் எனப்படும் திலீபன், 1963ஆம் ஆண்டு நவம்பர் 27 யாழ்ப்பாணத்தில் ஊரெழுவில் பிறந்தவர்.

தமிழீழ விடுதலைப் புலிகளின் ஆரம்ப கால உறுப்பினர்களில் ஒருவராக இருந்த திலீபன் யாழ். மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளராகவும் செயற்பட்டவர். அவர் கருத்தியல் ரீதியாக ஆழமான புரிதல் கொண்ட ஒரு போராளியாக இருந்தார்.

பால்நிலை மற்றும் சமூக சமத்துவக் கண்ணோட்டம், பிற்போக்குத்தனங்களை உடைக்கும் முற்போக்குத் தன்மை கொண்ட திலீபன் ஈழ விடுதலைப் போராட்டத்தின் ஜனநாயக முகமாகும்.

திலீபனின் முகம் இன்று அனைவருக்கும் அச்சொட்டாக நினைவிருக்கும். ஆனால், காலகாலமாக சொல்லக் கேட்டிருக்கின்றோம் அவரது முகம் மாத்திரம் அல்ல அவரது குரலும் அதன் கம்பீரமும், அவரது தாயக சிந்தனையும் அவரின் கருத்துக்களை கேட்கும் போது, கேட்பவர்களை தன்பால் ஈர்க்கும் வல்லமை கொண்டது என்று.

தாயகக்கனவுடன், ஐந்து அம்சக்கோரிக்கைகளை முன்வைத்து, உண்ணா நோன்பு நோற்று, 12 நாட்கள் சொட்டு தண்ணீர் அருந்தாமல் தாயக கனவுடனேயே மரித்துப் போன ஒரு விடுதலை வேங்கை திலீபன்.

இன்று 36 ஆண்டுகள் பூர்த்தி ஆகும் நிலையில் அவரது திருவுருப் படத்துக்கு அஞ்சலி செலுத்துவதில் தான் எத்தனை அரசியல், எத்தனை அடிபிடி, எத்தனை அடக்குமுறைகள்.

இவை அனைத்தையும் தாண்டி உணர்வுள்ள ஒவ்வொரு ஈழத்தமிழர்களும் மானசீகமாக, எதிர்ப்புகளை மீறியும் தியாக தீபத்தை நினைவேந்திக் கொண்டிருக்கின்றனர்.

இவ்வாறிருக்கையில், திலீபன் உயிர் பிரிந்து 36 வருடங்களுக்குப் பிறகு அவர் தொடர்பான வெளிவராத பல உண்மைகள் தற்சமயம் வெளியாகியிருக்கின்றன.

இது தியாக தீபம் திலீபனின் நெருங்கி நண்பர் பகிர்ந்து கொள்ளும் ஒரு பதிவு, இவையனைத்தும், 1984 இல் புன்னாலைக்கட்டுவன் பிரதேசப்பொறுப்பாளராகவும், 1987 இல் வெளியீட்டுப் பிரிவு பொறுப்பாளராகவும், 1988 இல் தமிழ்நாட்டில் அரசியல்பணி செய்தவரும், 1990 இல் தமிழீழ விடுதலைப்புலிகளின் மக்கள் முன்னணியின் யாழ். மாவட்ட அமைப்பாளரும், 1991 இல் யாழ்.மாவட்ட அரசியல் நிர்வாக பொறுப்பாளராகவும், தீலிபனுடன் 12 நாட்கள் மேடையில் இருந்தவருமாகிய இ,ராஜனின் ஆவணப்படுத்தும் தேடலின் முயற்சியின் எழுத்துருவாக்கம் இந்தத் தகவல்கள்.

கடந்த 23ஆம் திகதி (23.09.2023) இலண்டன் நேரம் காலை 11 மணிக்கு ஆஸ்திரேலியாவில் இருந்து ஒரு வட்சப் தொலைபேசி அழைப்பு ராஜனுக்கு வருகின்றது. அழைப்பேற்படுத்தியவர், தியாகி தீலிபனின் நெருங்கிய பள்ளி நண்பன் ரவிராஜ். திலீபனின் உற்ற பாடசாலை நண்பராக ரவிராஜ் அடையாளப்படுத்தப்படுகின்றார்.

பல தேடல்களுக்குப் பிறகு திலீபனின் நண்பரது தொடர்பு ராஜனுக்குக் கிடைத்தது. இதன்போது, ராஜனுடன் நினைவுகளைப் பகிர்ந்துகொண்ட ரவிராஜ், திலீபன் அப்பா இராசையா ஆசிரியர் ஸ்கூட்டரை தானும் தீலிபனும் ஓடியதும் துவிச்சக்கர வண்டியில் சுற்றித் திரிந்த நினைவுகளை ரவிராஜ் மீட்டினார்.

பாடசாலை நாட்களில் ஒரு நாள் மனோகரா தியேட்டரில் படம் பார்த்ததாகவும், படத்தின் பெயர் நினைவு வருகின்றது இல்லை என்றும் அந்த சந்தோசமான நாளை பற்றியும் நினைவுகளையும் பகிர்ந்து கொண்டார்.

யாழ். இந்து சார்பில் திலீபனும் நண்பர்களான நிமலன், மகேசன், பரதன் கொழும்பு சென்று சதுரங்கப் போட்டியில் கலந்துகொள்வது பற்றியும் அந்த அனுபவங்களைத் திலீபன் பகிர்ந்து கொள்வதையும் அவனின் சதுரங்க ஆட்டத்தை பற்றியும் ரவிராஜ் பெருமையாகக் கூறினார்.

திலீபனின் தந்தை சமைத்து திலீபனுக்குக் கட்டிக்கொடுத்துவிடும் உணவைத் தங்களுக்குத் தந்து தங்கள் உணவை வேண்டி மாற்றி சாப்பிட்ட மதிய இடைவேளை நாட்களையும் திலீபனின் தியாக வேள்வி நாட்களையும் பற்றி ரவிராஜ் பகிர்ந்து கொண்டுள்ளார்.

பாடசாலை நாட்கள் இல்லாத வேளையில் திலீபன் வீட்டுக்குச் சென்று அவன் வீட்டுக்குப் பின்னால் உள்ள மரவள்ளி தோட்டத்தில் மரவள்ளிக்கிழங்கு பிடுங்கி சுட்டு சாப்பிட்டு தோட்டக் கிணற்றில் உள்ள தொட்டியில் நீச்சல் அடித்து நீந்திய

(7ஆம் பக்கம் பார்க்க....)

# தியாக தீபம் திலீபனுக்கு வவுனியாவில் அஞ்சலி!





தியாகதீபம் திலீபனின் 36ஆம் ஆண்டு நினைவேந்தல் நிகழ்வு நேற்றையதினம் வவுனியா தோணிக்கல்லில் போராளிகள் நலன்புரி சங்க அலுவலகத்தில் இடம்பெற்றது.

இதன்போது தியாகதீபம் திலீபனின் உருவப்படத்திற்கு இரு மாவீரர்களின் தாயான உருத்திரானந்தம் யோகமணியால் முதல் சுடர் ஏற்றி வைக்கப்பட்டது. முன்னாள் போராளிகள் மற்றும் பொதுமக்களினால் மலர் அஞ்சலியும் செலுத்தப்பட்டது.

போராளிகள் நலன்புரி சங்க தலைவர் எஸ் அரவிந்தனின் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் முன்னாள் வடமாகாண சபை உறுப்பினர் செ. மயூரன், தமிழ் விருட்சம் அமைப்பின் தலைவர் சந்திரகுமார் மற்றும் போராளிகள், பொதுமக்கள் எனப் பலரும் கலந்து கொண்டிருந்தனர்.










## தியாக தீபம் திலீபனின்...

(6ஆம் பக்கத் தொடர்ச்சி...)

நினைவுகளையும் , இராசையா மாஸ்டர் அதிகம் பேசாமல் உபசரிப்பதையும் ரவிராஜ் இதன்போது நினைவில் கொண்டு வந்தார்.

தியாகி திலீபனின்ன் வீட்டு வரவேற்பறை சுவற்றில் தாயின் படம் இருக்கின்றது எனவும், 1964 ஆம் ஆண்டில் அவர் உயிரிழந்தார் எனவும் ரவிராஜ் கூறினார்.

திலீபன் ஊரெழுவில் இருந்து தினமும் அவர் வீட்டுக்கு வந்து அவரைத் துவிச்சக்கர வண்டியில் ஏற்றிக்கொண்டு யாழ். இந்து செல்வது வழக்கம். ஜி.சீ.ஈ. உயர்தரப் பிரிவுக்கு அவர்கள் இருவரும் சென். ஜோன்ஸ் அக்கடமிக்குச் சென்ற போதும் இந்தப் பழக்கம் தொடர்ந்தது.

1983 இல் சிங்கள அரசால் அடித்து விரட்டப்பட்டு கப்பல் மூலம் அகதிகளாத் தமிழ் மக்கள் காங்கேசன்துறை துறைமுகத்துக்குக் கொண்டுவரப்பட்டபோது திலீபனும் ரவிராஜும் மற்றும் நண்பர்களும் ஓடிச்சென்று உதவிகள் புரிந்ததையும், அந்தச் சம்பவம் எப்படி தங்கள் மனங்களில் ஆறாத வடுக்களை ஏற்படுத்தியது என்று அன்றைய மன உணர்வுகளை ரவிராஜ் அப்படியே மீள் பதிவு செய்தார்.

திலீபன் தங்கள் வீட்டுக்கு வருவதாகவும், தன் அம்மா மீது மிகுந்த பாசம் கொண்டவனாக இருந்தான் என்றும் அன்றைய அவனது உணர்வுகளைப் பகிர்ந்து கொண்டார் ரவிராஜ்.

1984 ஆம் ஆண்டு தான் வெளிநாடு சென்று விட்டார் எனவும், பின்பு 1985ஆம் ஆண்டு திரும்பி இலங்கை வந்த போது திலீபனைத் தனியாக வந்து ஒரு விடுதலைப் போராளியாகச் சந்தித்ததையும், அவருடன் அரசியல் பேசியதையும் சிலாகித்து கூறிக்கொண்டார் ரவிராஜ்.

1987ஆம் ஆண்டும் இலங்கை வந்த போது திலீபன் ஒரு ஹயஸ் வாகனத்தில் இரு போராளிகள் ஆயுதம் தாங்கி வர வந்து தன்னைச் சந்தித்தார் எனவும், அந்தச் சந்திப்பு இறுதிச் சந்திப்பாக அமையும் என்று தான் எண்ணவில்லை எனவும் ரவிராஜ் பதிவிட்டுள்ளார்.

# தமிழக மீனவர்கள் மீது நடுக்கடலில் தாக்குதல்!



## தமிழகத்தில் போராட்டம்

இந்திய கடற்தொழிலாளர்கள் மீது நடுக்கடலில் வைத்து கடந்த சனிக்கிழமை இலங்கையர்களால் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

இந்த தாக்குதலை கண்டித்து நேற்று தமிழகத்தின் நாகப்பட்டின மற்றும் இராமநாதபுர மாவட்ட கடற்தொழிலாளர்கள் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

இரண்டு மாவட்டங்களில் கடற்தொழிலாளர்கள் போராட்டம் நடத்தி வருகின்றனர்.

இந்த நிலையில், மத்திய, மாநில அரசுகள் உரிய நடவடிக்கை எடுக்காவிட்டால் தமிழக கடற்தொழிலாளர்கள் அனைவரும் போராட்டத்தில் ஈடுபடப் போகிறோம் என நாகப்பட்டின கடற்தொழிலாளர் சங்கத் தலைவர் சௌந்தரராஜன் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

இந்த நிலையில் தாக்குதல் நடத்தியவர்கள் மீன்பிடி வலை, ஜி.பி.எஸ். கருவிகள் , கையடக்கத் தொலைபேசிகள் மற்றும் மதிப்புமிக்க பொருட்களை அபகரித்துள்ளனர் என்று தெரிவிக்கப்படுகிறது.

பருத்தித்துறைக்கு அருகில் கடந்த சனிக்கிழமையன்று கடற்தொழில் ஈடுபட்டு கொண்டிருந்த போது மோட்டார் படகில் வந்த ஏழு பேர் நடுக்கடலில் தம்மை எதிர்கொண்டு உடமைகளைக் கோரினர் என பாதிக்கப்பட்ட கடற்தொழிலாளர்கள் கூறியுள்ளனர்.

அதற்கு கடற்தொழிலாளர்கள் மறுப்பு வெளியிட்டதை அடுத்து அவர்கள் மீது பயங்கர ஆயுதங்களால் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது என தெரிவிக்கப்படுகிறது.

இந்த தாக்குதலில் காயமடைந்த மூன்று கடற்தொழிலாளர்கள் நாகப்பட்டினம் அரசவைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். அத்துடன், வேளாங்கண்ணி பொலிஸ் நிலையத்தில் வழக்குப் பதிவு செய்யப்பட் டுள்ளது.

இந்த தாக்குதலில் இலங்கை அரசின் தொடர்பு இருக்கும் என கடற்தொழிலாளர்கள் கடுமையாக சந்தேகிக்கின்றனர் என இந்திய தேசிய கடற்தொழிலாளர்கள் சங்கத் தலைவர் ஆர்.எம்.பி.ராஜேந்திர நாட்டார் தெரிவித்துள்ளார்.

# 2000 ரூபா நாணயத்தாள் விரைவில் மதிப்பு இழப்பு!

புழக்கத்திலுள்ள 2000 ரூபா நாணயத்தாள்களை மீளப் பெறுவது தொடர்பில் கடந்த மே மாதம் இந்திய ரிசர்வ் வங்கி தீர்மானித்திருந்தது.

இந்த நிலையில், பொது மக்கள் தம்வசம் வைத்திருக்கும் 2000 ரூபாய் இந்திய நாணயத் தாள்களை இந்திய வங்கிகளில் கொடுத்து மாற்றிக் கொள்ளும் இறுதித் திகதி செப்டெம்பர் 30 என அறிவிக்கப்பட்டுள்ளது.

2000 ரூபா நாணயத்தாளை மீளப் பெறுவது தொடர்பான அறிவித்தல் வெளியாகிய முதல் 20 நாட்களுக்குள்




புழக்கத்திலிருந்த சுமார் 50சதவீதமான நாணயத்தாள்கள் வங்கிகளுக்கு கிடைத்திருந்தன என ரிசர்வ் வங்கி தெரிவித்துள்ளது.

அத்துடன், செப்டெம்பர் 30 ஆம் திகதிக்கு முன்னதாக, இந்தியா முழுவதிலும் காணப்படும் 19 ரிசர்வ் வங்கி கிளைகள் மற்றும் எந்தவொரு வங்கிக் கிளைகளிலும் இந்திய 2000 ரூபா தாள்களை கொடுத்து மாற்றிக் கொள்ளலாம், அல்லது வாடிக்கையாளர்கள் தமது கணக்குகளில் வைப்புச் செய்யலாம் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

# பாடசாலை சிறுவர்களுக்கு போர் பயிற்சி வழங்கும் ரஷ்யா!

ரஷ்யா பாடசாலைகளில் குழந்தைகளை மறைமுகமாக போரில் ஈடுபடுத்த தயார்படுத்தி வருகிறது என தகவல்கள் வெளியாகியுள்ளது.

போர் 575 நாட்களுக்கும் மேலாக தொடர்ந்து நடைபெற்று வரும் நிலையில் போரில் வெற்றி பெற இரு தரப்பும் பல்வேறு வழிகளை பின்பற்றி வருகின்றது.

அந்த வகையில் ரஷ்யா, தன் நாட்டு பாடசாலைகளில் குழந்தைகளையும் மறைமுகமாக போரில் ஈடுபடுத்த தயார் படுத்தி வருகிறது என தகவல்கள் வெளியாகியுள்ளது.

ரஷ்யாவில் பரவலாக அனைத்து இடைநிலைக்கு மேற்பட்ட பாடசாலைகளிலும் குழந்தைகளுக்கு பதுங்கு குழி தோண்டுவது, கையெறி குண்டு வீசுவது, துப்பாக்கியை கையாளுதல் உட்பட பல போர்திறன் பயிற்சிகள் வழங்கப்பட்டு வருகின்றன.

பெரும் பொருட்செலவில் ரஷ்யா ஈடுபட்டு சுமார் 10 ஆயிரத்திற்கும் மேற்பட்ட பயிற்சி கூடங்களை அமைத்துள்ளது.

உக்ரைன் போர், தேசப்பற்று மற்றும் இராணுவ பற்று ஆகியவை பாடத் திட்டங்களில் புதியதாக சேர்க்கப்பட்டுள்ளன.



உயர்நிலை பாடசாலைகளில் மாணவர்கள் துப்பாக்கியை பயன்படுத்துவதற்கும், தானியங்கி துப்பாக்கிகளை கையாளுவதற்கும், பிரித்து கோர்ப்பதற்கும் கைதேர்ந்த நிபுணர்களால் பயிற்றுவிக்கப்படுகிறது என தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும், பாடசாலை குழந்தைகள் போர் வீரர்கள் அணியும் உடை மற்றும் தொப்பி ஆகியவற்றை தைத்து தரவும் பயிற்சியளிக்கப்படுகிறது. இன்றைய குழந்தைகளை எதிர்கால ரஷ்ய போர் வீரர்களாக கட்டாயபடுத்தி மாற்ற முயல்வதற்கு சமூக வலைதளங்களில் பயனர்கள் அந்நாட்டிற்கு கண்டனம் தெரிவித்து வருகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது.

# இத்தாலி மாபியா குழுவின் தலைவர் மெசினா டெனாரோ காலமானார்





இத்தாலிய, மாபியா குழுவின் தலைவராக 30 வருடங்களுக்கும் மேலாக செயல்பட்ட மற்றியோ மெசினா டெனாரோ தமது 61 ஆவது வயதில் காலமானார்.

உலகளாவிய ரீதியாகவும் இத்தாலியிலும் மிகப்பிரபலமான மாபியா அமைப்பின் தலைவராக செயல்பட்டவர் இவர் என கருதப்படுகின்றது.

கடந்த 30 வருடங்களுக்கும் மேலாக தேடப்படுபவர்கள் பட்டியலில் ஒருவராக இருந்தவர், கடந்த ஜனவரி மாதம் கைது செய்யப்பட்டார்.

இவர் கைது செய்யப்பட்ட போது, புற்றுநோயினால் பீடிக்கப்பட்டிருந்தார் என இத்தாலிய பொலிஸார் தெரிவித்தனர்.

சிறையில் தடுத்து வைக்கப்பட்டிருந்த இவர், பின்னர் பலத்த காவலுடன் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வந்த நிலையிலேயே உயிரிழந்துள்ளார். டெனாரோ, பல கொலைகளுடன் தொடர்பு கொண்டவர் என்பதுடன், கடந்த 1992 ஆம் ஆண்டு மாபியா எதிர்ப்பு முன்னணி வழக்கறிஞர்களை கொலை செய்த குற்றங்களுக்காக, அவர் நீதிமன்றத்தில் பிரசன்னமாகாத நிலையில் விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டன.

நீதிமன்ற விசாரணையில் அவருக்கு ஆயுள் தண்டனை வழங்கப்பட்டது.

கொலை, கொள்ளை, நிதி மோசடி, போதைப்பொருள் கடத்தல் உட்பட பல குற்றச்செயல்களில் இவரது அமைப்பு செயல்பட்டமை நிரூபிக்கப்பட்டிருந்தது.

# தூதுவரை திரும்ப அழைக்கும் பிரான்ஸ்!

ஆட்சிக் கவிழ்ப்பை அடுத்து நைஜரில் இருந்து தனது தூதுவரையும் படைகளையும் திரும்பப் பெறுகிறோம் என்று பிரான்ஸ் ஜனாதிபதி இம்மானுவேல் மக்ரோன் அறிவித்துள்ளார்.

கடந்த ஜூலை மாதம் ஜனநாயக முறைப்படி தேர்ந்தெடுக்கப்பட்ட ஜனாதிபதி மொஹமட் பாஸூமை அகற்றி ஆட்சிக் கவிழ்ப்பு நடவடிக்கை இடம்பெற்றிருந்தது.

இந்த நிலையில் நேற்று முந்தினம் தொலைக்காட்சியில் உரையாற்றிய மக்ரோன், அடுத்த சில மணிநேரங்களில் தூதுவரும் பல இராஜதந்திரிகளும் பிரான்சுக்குத் திரும்புவார்கள் என அறிவித்திருந்தார்.

பிரெஞ்சு வீரர்கள் வசிக்கும் இராணுவ தளத்திற்கு வெளியேயும் தலைநகர் நியாமியிலும் கடந்த வாரங்களாக ஆயிரக்கணக்கான மக்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

பல வாரங்களாக இராணுவத்தின் அழுத்தம் மற்றும் மக்கள் ஆர்ப்பாட்டங்களுக்குப் பின்னர் பிரான்ஸ் இந்த முடிவை அறிவித்துள்ளது.



# சரத் வீரசேகர எம்.பிக்கு அமெரிக்கா கதவடைப்பு?

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் நாடாளுமன்ற உறுப்பினர் சரத் வீரசேகர அமெரிக்காவுக்கு விஜயம் மேற்கொள்வதற்கான விசாவை வழங்குவதை அமெரிக்கத் தூதரகம் தாமதிக்கின்றது என ஜலண்ட் செய்தி வெளியிட்டுள்ளது.

அடுத்த மாதம் அமெரிக்கா செல்லவுள்ள இலங்கை நாடாளுமன்றக் குழுவில் இடம்பெற்றுள்ள சரத் வீரசேகரவுக்கு விசா வழங்க முடியாது எனவும், அவருக்குப் பதில் சிறுபான்மை நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவரை நியமியுங்கள் எனவும் இலங்கை நாடாளுமன்றத்துக்கு அமெரிக்கா தெரிவித்துள்ளதால் சர்ச்சை மூண்டுள்ளது எனவும் ஜலண்ட் செய்தி வெளியிட்டுள்ளது.

அமெரிக்காவின் தேசிய ஜனநாயக நிறுவகம் யு.எஸ்.எயிட்டின் நிதிஉதவியுடன் இலங்கையின் நாடாளுமன்ற மேற்பார்வைக் குழுவின் தலைவர்களுக்கான கருத்தரங்கொன்றை ஏற்பாடு செய்துள்ளது.

இலங்கை நாடாளுமன்றத்தில் 20 நாடாளுமன்ற மேற்பார்வைக் குழுக்கள் உள்ளன. அவருக்கு ஐக்கிய நாடுகள் அபிவிருத்தி நிலையம் ஆதரவளிக்கின்றது.

இதேவேளை, இந்த விடயம் தொடர்பில் நாடாளுமன்ற சபாநாயகருக்குக் கடிதமொன்றை எழுதவுள்ளதாக சரத் வீரசேகர தெரிவித்துள்ளார் எனவும் ஜலண்ட் செய்தி வெளியிட்டுள்ளது.

இது குறித்து அமெரிக்கத் தூதுவரிடம் சபாநாயகர் விளக்கமொன்றைப் பெறுவார் என நம்புகின்றேன் எனவும் சரத் வீரசேகர தெரிவித்துள்ளார்.

மக்களால் தெரிவு செய்யப்பட்ட ஜனாதிபதிக்கு எதிராக கடந்த வருடம் இலங்கையில் இடம்பெற்ற மக்கள் எழுச்சியில் அமெரிக்காவின் பங்கு குறித்த தனது விமர்சனங்களால் அமெரிக்கா அதிருப்தியடைந்திருக்கலாம் எனவும் சரத் வீரசேகர தெரிவித்துள்ளார்.

தனக்குப் பதில் சிறுபான்மை நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவருக்கு இடமளிக்க வேண்டும் என அமெரிக்க நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவர் தெரிவித்துள்ளார் என நாடாளுமன்றத்தின் சிரேஷ்ட உறுப்பினர் ஒருவர் தன்னிடம் தெரிவித்துள்ளார் எனக் குறிப்பிட்டுள்ள சரத் வீரசேகர, தனக்கு விசா வழங்கத் தவறியுள்ளமை குறித்து தெளிவான விளக்கம் வேண்டும் எனவும் சரத் வீரசேகர எம்.பி. மேலும் தெரிவித்துள்ளார்.

# அவிசாவளை இரட்டைப் படுகொலை: ஊடகவியலாளர் உட்பட நால்வர் கைது

## துப்பாக்கிதாரிகளுக்கு உதவினார்களாம்



அவிசாவளையில் ஓட்டோ மீது துப்பாக்கிச் சூடு நடத்தியதில் இருவர் உயிரிழந்துள்ளதுடன், மேலும் இருவர் படுகாயமடைந்த சம்பவத்துடன் தொடர்புடைய நான்கு சந்தேகநபர்களை விசேட அதிரடிப் படையினர் கைது செய்துள்ளனர் என்று அவிசாவளை பொலிஸார் தெரிவித்தனர்.

துப்பாக்கிச் சூடு நடத்தியவர்களுக்குத் தகவல் வழங்கியமை, துப்பாக்கிச் சூடு நடத்தியவர்களுக்கு ஓட்டோ மூலம் போக்குவரத்து வசதிகளை வழங்கியமை, உதவி செய்தமை போன்ற காரணங்களுக்காகவே இவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர் என்றும் பொலிஸார் குறிப்பிட்டனர்.

அவர்களில் ஊடகவியலாளர் ஒருவரும் அடங்குகின்றார் என்றும் பொலிஸார் தெரிவித்தனர்.

கடந்த 21 ஆம் திகதி இரவு, கேகாலை பகுதியில் உள்ள மரண வீடொன்றுக்கு ஓட்டோவில் பயணித்த குழுவினரை இலக்கு வைத்து இந்தத் துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டிருந்தது.




# வாழைச்சேனை பஸ் மீது போத்தல் வீச்சுத் தாக்கு!

வாழைச்சேனை பொலிஸ் பிரிவில் மீராவோடை வழியாக வாழைச் சேனை– அக்கரைப்பற்று செல்லும் பஸ் மீது தாக்குதல் நடத்தப்பட்ட தில் நடத்துனருக்கு காயம் ஏற்பட் டுள்ளது.



வாழைச்சேனையிலிருந்து திங் கட்கிழமை காலை மீராவோடை வழியாக அக்கரைப்பற்று நோக்கிச் சென்ற இலங்கைப் போக்குவரத்துச் சபையின் வாழைச்சேனை டிப்போ வுக்குச் சொந்தமான பஸ் மீதே இந்தத் தாக்குதல் மேற்கொள்ளப் பட்டுள்ளது.

மட்டக்களப்பு – வாழைச்சேனை பிரதான வீதியின் 18 ஆம் கட்டைப் பகுதியில் வைத்து அதிகாலை 5.10 மணியளவில் இனந்தெரி யாத நபர்களால் தண்ணீர் போத் தல் தாக்குதல் மேற்கொள்ளப் பட்டுள்ளது.

இதன் காரணமாக பஸ்ஸின்ன் கண்ணாடிகள் உடைந்து சிதறின. நடத்துனரும் சிறிய காயங்களுக் குள்ளாகியுள்ளார்.

இம்முறை கேடான தாக்குத லால் தமது அத்தியாவசியத் தேவை களுக்கு அதிகாலை வேளையில் பயணம் செய்த பிரயாணிகள் பெரிதும் அசௌகரியத்தை எதிர் கொண்டனர். தாக்குதலுக்கான காரணம் இதுவரை கண்டறியப் படவில்லை.

மட்டக்களப்பு போதனா வைத் தியசாலை வரை சென்று அக்கறைப் பற்றுக்குச் செல்வதன் காரண மாக இந்த பஸ்ஸில் வழமையாக தமது வைத்தியத்தேவைகளுக்காக மட்டக்களப்பு போதனா வைத்திய சாலைக்குச்செல்லும் கூடுதலான நோயாளிகளும் நோயாளிகளைப் பார்வையிடுவோரும் பல்கலைக் கழக மாணவர்கள், அரச, தனியார் அலுவலர்கள் மற்றும் ஏனைய தேவைகளுக்காகச் செல்வோரும் பயணிப்பது வழக்கமாகும்.

## சந்திரிகா வாவியில் மூழ்கி சிறுவன் சாவு

எம்பிலிபிட்டி – சந்திரிகா வாவியில் மூழ்கி ஒன்பது வயது சிறுவன் ஒருவர் உயிரிழந்துள்ளார் என்று பொலிஸார் தெரி வித்துள்ளனர்.



அந்தச் சிறுவன் தனது தாய் உள்ளிட்ட இருவரு டன் சந்திரிகா வாவியில் நீராடச் சென்றபோதே நீரில் மூழ்க– 'யுள்ளார் என்று தெரிவிக்கப்பட் டுள்ளது.

அதன்போது, பொலிஸ் உயிர்காப்பு உத்தியோகத் தர்கள் சிறுவனை மீட்டு சிகிச்சைக்காக எம்பிலிப்பிட்டி வைத்தியசாலைக்குக் கொண்டு சென்றனர்.

எனினும், அவர் சிகிச்சைக்காகச் சேர்க்கப்பட்ட சந்தர்ப்பத்தில் உயிரிழந்திருந்தார் என்று தெரிவிக் கப்பட்டுள்ளது.

## தங்காலைக் கடலில் மூழ்கி போலந்து யுவதி உயிரிழப்பு

தங்காலைக் கடலில் தனது ஆண் நண்பனுடன் கட லில் குளித்த போலந்து நாட்டு யுவதியொருவர் அலையில் சிக்கி நீரில் மூழ்கி உயிரிழந்துள்ளார்.

இரு போலந்து பிரஜைகளும் நேற்றுமுன்தினம் மாலை தங்காலைக் கடலில் குளிக்கச் சென்ற வேளை பலத்த கடல் அலைகளால் அவர்கள் இருவரும் அடித்துச் செல்லப்பட்டுள்ளனர்.

பின்னர் இருவரையும் அங்கிருந்த வர்கள் மீட்டு தங்காலை வைத்திய சாலையில் சேர்த்துள்ளனர்.

இந்நிலையில், கடல் அலையில் சிக்கி 22 வயதுடைய போலந்து யுவதி வைத்தியசாலையில் சிகிச்சைக்காகச் சேர்க்கப் பட்ட நிலையில், அவர் இறந்துவிட்டார் என்று வைத் தியர்கள் தெரிவித்தனர்.

இந்தச் சம்பவம் தொடர்பான மேலதிக விசார ணைகளை தங்காலை பொலிஸார் மேற்கொண்டு வரு கின்றனர்.



# எனக்கு அதிகாரம் கிடைத்தால் மைத்திரிக்கு பாடம் புகட்டுவேன்

## பீல்ட் மார்ஷல் பொன்சேகா விளாசல்

"முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கு இராணுவம் தொடர்பில் அடிப்படை அறிவு கூட இல்லை. அதன் காரணமாகவே அவர் எனக்கு வழங்கப்பட்டுள்ள பீல்ட் மார்ஷல் நிலையை விமர்சிக்கின்றார். எனக்கு என்றாவது ஒரு நாள் அதிகாரம் கிடைத்தால் மைத்திரிபால சிறிசேனவுக்குப் பாடம் புகட்டுவேன்."

– இவ்வாறு ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா தெரிவித்தார்.

இது தொடர்பில் ஊடகங்களுக்குக் கருத்து வெளியிட்ட அவர் மேலும் குறிப்பிடுகையில் –

"மைத்திரிபால சிறிசேன ஜனாதிபதியாகப் பதவியேற்றதன் பின்னர் முன்னெடுக்கப்பட்ட 100 நாள் வேலைத் திட்டத்தில் எனக்கும், ஷிராணி பண்டாரநாயக்கவுக்கும் எவ்வாறு நியாயம் வழங்குவது என்பது தொடர்பில் ஆராய வேண்டும் என்ற முன்மொழிவு காணப்பட்டது.

இவற்றுக்கு இணக்கம் தெரிவித்த பின்னரே பொது வேட்பாளராக மைத்திரிபால வேட்புமனுத் தாக்கல் செய்தார். அவருக்காக 100 தேர்தல் பிரசாரக் கூட்டங்களை நான் நடத்தியிருக்கின்றேன்.

தேர்தல் கூட்டங்களில் சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க, ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க உள்ளிட் ஐக்கிய தேசியக் கட்சியின் அனைவரும் பாரிய அர்ப்பணிப்புக்களைச் செய்தனர்.

ஆனால், பதவியேற்று 48 மணித்தியாலங்களுக்குள் அவர்கள் அனைவருக்கு எதிராகவும் செயற்படத் தொடங்கியவரே மைத்திரிபால சிறிசேன. இராணுவத்தைப் பற்றி அடிப்படை அறிவு கூட அவருக்கு இல்லை. இங்கிலாந்தில் இராணுவத் தளபதியாக பதவி வகிப்பவர்கள் பீல்ட் மார்ஷல் ஆவர். ஆனால், அந்நாட்டு இராணுவத்தில் 80 ஆயிரம் சிப்பாய்கள் மாத்திரமே இருப்பர். பீல்ட் மார்ஷல் பதவிக்கும் சிப்பாய்களின் எண்ணிக்கைக்கும் தொடர்பில்லை.

மஹிந்த ராஜபக்ஷ எனது ஜெனரல் நிலையை நீக்கியபோது, எனக்கு பீல்ட் மார்ஷல் நிலையை வழங்குவதாக ஐக்கிய தேசியக் கட்சி நாடாளுமன்றத்தில் வாக்குறுதியளித்தது.

அந்த வாக்குறுதியையே மைத்திரிபால சிறிசேன நிறைவேற்றினார். மாறாக அவரது கால்களில் விழுந்து நான் பீல்ட் மார்ஷல் நிலையைப் பெறவில்லை.

உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதல்களுக்கான சூழலை மைத்திரிபால சிறிசேன போன்றவர்கள் எவ்வாறு உருவாக்கினர் என்பதை நான் நாடாளுமன்றத்தில் தெளிவாகக் குறிப்பிட்டிருக்கின்றேன். என்றாவது ஒரு நாள் எனக்கு அதிகாரம் கிடைத்தால் மைத்திரிபால சிறிசேனவுக்கு நான் பாடம் புகட்டுவேன். சட்டம் என்றால் என்ன? நீதி என்றால் என்ன? என்பதை அவருக்குக் கற்றுக் கொடுப்பேன்." – என்றார்.

# அந்தரங்க விடயங்களை நேரலையாக வெளியிட்ட இளம் தம்பதியினர் கைது

இளம் தம்பதியர் தமது அந்தரங்க விடயங்களை நேரலையாக வெளியிட்டமைக்காகக் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

திருமணமான இளம் தம்பதியர் தமது அந்தரங்க விடயங்களை நேரலையாக இணையத்தளத்தில் பகிர்ந்தமைக்காகவே கணினி குற்றப் புலனாய்வுப் பிரிவினரால் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இவ்வாறு கைதுசெய்யப்பட்டவர்கள்



23 வயதுடைய பெண்ணும், 25 வயதுடைய ஆணும் ஆவர்.

16 வயது முதல் 22 வயதுக்குட்பட்ட இளைஞர்களை நோக்காகக் கொண்டு இவர்கள் இருவரும் தங்கள் அந்தரங்க விடயங்களை நேரலையில் காணொளிகளாகப் பகிர்ந்துள்ளனர்.

குறித்த இருவரையும் கைதுசெய்துள்ள கணினி குற்றப் புலனாய்வுப் பிரிவினர் விசாரணைகளை மேற்கொண்டுள்ள நிலையில், கொழும்பு நீதிவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தியதையடுத்து அவர்கள் இருவரும் பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளனர்.



# தினேஷ் ஷாஃப்டரின் உடலத்தை மீளவும் குடும்பத்தினரிடம் ஒப்படைக்க உத்தரவு

நீதிமன்ற உத்தரவுக்கமைய தோண்டி எடுக்கப்பட்ட வர்த்தக தினேஷ் ஷாஃப்டரின் உடலை, அவரது குடும்பத்தாரிடம் மீள கையளிக்குமாறு, கொழும்பு மேலதிக நீதிவான் நீதிமன்றம், குற்றப் புலனாய்வுத் திணைக்களத்துக்கு உத்தரவிட்டுள்ளது.

வர்த்தகர் தினேஷ் ஷாஃப்டரின் மரணத்திற்கான காரணத்தை கண்டறிவதற்காக, அடக்கம் செய்யப்பட்ட அவரது உடலை மீண்டும் தோண்டி எடுக்குமாறு அவரின் மரணம் தொடர்பான விசாரணைகளுக்காக நியமிக்கப்பட்ட விசேட சட்ட வைத்திய நிபுணர் குழு, நீதிமன்றிடம் கோரிக்கை விடுத்திருந்தது.

அதன்படி, கொழும்பு நீதிவான் நீதிமன்றம் வழங்கிய உத்தரவுக்கமைய, பொரளை பொது மயானத்தில் அடக்கம் செய்யப்பட்டிருந்த தினேஸ் ஷாஃப்டரின் உடல், கடந்த மே மாதம் 25 ஆம் திகதி தோண்டி எடுக்கப்பட்டது.

இந்தநிலையில், சடலம் மீதான மீள் பிரேத பரிசோதனை நிறைவடைந்துள்ளமையினால் அவரது உடலை அவரது குடும்பத்தினரிடம் கையளிக்குமாறு கொழும்பு மேலதிக நீதிவான் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

# கிழக்கில் மேலும் எழுநூறு பட்டதாரிகளுக்கு ஆசிரிய நியமனங்கள் வழங்க ஆளுநர் அனுமதி

(நூருல் ஹுதா உமர்)

கிழக்கு மாகாணத்தில் தொடர்ந்தும் நிலவி வந்த ஆசிரியர் பற்றாக்குறையை கருத்தில் கொண்டு, கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமானால் கிழக்கில் 700 பட்டதாரி ஆசிரியர்களுக்கான நியமனம் வழங்க மாகாண பொது சேவை ஆணைக்குழுவிடம் இன்று கையொப்பம் இடப்பட்டுள்ளது.

கடந்த காலங்களில் செந்தில் தொண்டமானால் கிழக்கு மாகாணத்தில் 633



ஆசிரியர் நியமனங்கள் வழங்கப்பட்டிருந்தன. இந்நிலையில் தற்போது மேலும் 700 பட்டதாரி ஆசிரியர்களுக்கான நியமனங்கள் வழங்கப்படவுள்ளன.

கிழக்கு மாகாணத்தில் நிலவும் ஆசிரியர் பற்றாக்குறையை நிவர்த்தி செய்யும் முகமாகவும், கல்வி துறையை மேலும் மேம்படுத்தும் நோக்கிலும் இந்நியமனங்கள் வழங்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# கடத்தல்காரர்களின் பிடியில் இருந்து தப்பிவந்த சாரதி பொலிஸில் தஞ்சம்

கம்பளை இலங்கை போக்குவரத்துச் சபை பஸ் டிப்போவில் கடமையாற்றும் பஸ் சாரதி, நேற்றுமுன்தினம் காலை சிலரால் தாக்கப்பட்டுக் கடத்தப்பட்ட நிலையில், கடத்தப்பட்டவர்களிடம் இருந்து தப்பி கம்பளை பொலிஸ் நிலையத்துக்கு இரவு வந்துள்ளார் என்று தெரிவிக்கப்படுகின்றது.

கடத்தல்காரர்கள் தம்மை வானில் ஏற்றி கொழும்பு, ஒருகொடவத்தை பகுதிக்கு அழைத்துச் சென்றனர் எனவும், அந்த இனந்தெரியாத நபர்கள் தன்னிடம் வாள் ஒன்று தொடர்பாக பலமுறை கேட்டனர் எனவும் குறித்த சாரதி பொலிஸாரிடம் தெரிவித்துள்ளார்.

பின்னர், பொலிஸாரால் கம்பளை போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அவர் சேர்க்கப்பட்டுள்ளார்.

வானில் கடத்திச் சென்ற குழுவில் பெண்ணொருவரும் அடங்குகின்றார் என்றும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

நேற்றுமுன்தினம் காலை மாவெலயில் இருந்து கண்டி நோக்கிப் பயணித்த இலங்கை போக்குவரத்து சபைக்குச் சொந்தமான பஸ்ஸை வான் ஒன்றில் வந்த சிலர் வழிமறித்து அதில் பயணியாகச் சென்ற சாரதி மீது கத்திக்குத்து தாக்குதல் நடத்திவிட்டு அவரைக் கடத்திச் சென்றிருந்தனர்.





# 54 கிலோ மீற்றர் தூரத்தை நடந்து சாதனை படைத்த 15 வயது மாணவி






பொகவந்தலாவை சென். மேரிஸ் மத்திய கல்லூரி மாணவி ஒருவர் 8 மணி 30 நிமிடங்களில் 54 கிலோ மீற்றர் தூரம் நடந்து சாதனை படைத்துள்ளார்.

சென். மேரிஸ் மத்திய கல்லூரியில் 10ஆம் வகுப்பில் கல்வி கற்றுவரும் நிதர்சனா என்ற 15 வயது மாணவியே இச்சாதனையைப் படைத்துள்ளார்.

இப்பயணம் அண்மையில் நாவலப்பிட்டி காவல் நிலையத்தின் முன்பாக காலை 06:05 மணிக்கு தொடங்கப்பட்டது. தொடர்ந்து சோழன் உலக சாதனை படைப்பதற்கான நடை பயணம், கினிகத்தோன, வட்டவளை, ஹட்டன், நோர்வுட், பொகவந்தலாவ நகரங்கள் ஊடாக, பகல் 02 மணி 35 நிமிடங்களில் பொகவந்தலாவை சென். மேரிஸ் தேசிய கல்லூரியில் நிறைவடைந்தது.

இச்சாதனை முயற்சியை ஆரம்பம் முதல் இறுதி வரை கண்காணித்த சோழன் உலக சாதனைப் புத்தக நிறுவனத்தின் இலங்கைக் கிளையின் துணைத் தலைவர் ஸ்ரீநாகவாணி ராஜா சாதனையாக உறுதி செய்தார் ,

சாதனை படைத்த மாணவிக்கும் அவரது மூன்று சகோதரிகளுக்கும் தேவையான கற்றல் உபகரணங்கள் மற்றும் காலணிகள் அன்பளிப்பாக வழங்கப்பட்டன.



# வடமராட்சியில் கிரிக்கெட் போட்டி: விண்ணப்பங்கள் கோரல்

உலக அஞ்சல் தினத்தை முன்னிட்டு பருத்தித்துறை அஞ்சலகம் நடத்தும் வடமராட்சிக்குட்பட்ட அரச நிறுவனங்களுக்கு இடையிலான கிரிக்கெட் போட்டிக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

7 வீரர்கள் 5 ஓவர்கள் கொண்ட இப்போட்டிக்கான விண்ணப்பப் படிவங்களை பருத்தித்துறை அஞ்சல் அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளலாம் எனவும், விண்ணப்பங்களை எதிர்வரும் 31 ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்கக் கூடியவாறு நேரடியாகவே அல்லது அஞ்சலக முகவரிக்கோ அனுப்பி வைக்குமாறும் ஏற்பாட்டாளர்கள் அறிவித்துள்ளனர். போட்டிகள் எதிர்வரும் 08 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை நடாத்த ஏற்பாடாகி உள்ளமை குறிப்பிடத்தக்கது.

# இன்றைய ராசி பலன்கள் - 26.09.2023




இன்று சிறப்பான பலன்கள் காணப்படும். இன்று நீங்கள் முக்கிய முடிவுகள் எடுக்கலாம். உங்களிடம் உறுதி காணப்படும்.

பணியிடத்தில் சக பணியாளர்களுடன் நட்பாக பழகுவீர்கள். உங்கள் மேலதிகாரிகளின் நன்மதிப்பை பெறுவீர்கள்.

உங்கள் துணையுடன் நெருக்கமாக பழகுவீர்கள். உங்கள் துணையை நன்கு புரிந்து கொள்வீர்கள். இருவரும் இன்றைய நாளை மகிழ்வுடன் கொண்டாடுவீர்கள்.

உங்கள் நிதிநிலைமை ஸ்திரமாக இருக்கும். உங்கள் பணப் பெட்டியில் பணம் கணிசமாக உயரும்.

கடவுள் அருளால் இன்று உங்கள் ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும்.




இன்று உங்களுக்கு மிகவும் சாதகமான நாள். நீங்கள் உங்கள் இலக்குகளை விரைந்து அடைவீர்கள்.நீங்கள் உங்கள் ஆர்வத்தை வளர்த்துக் கொள்ள இன்றைய நாளை முழுவதுமாக பயன்படுத்திக் கொள்ளலாம்.

பணியிடத்தில் முன்னேற்றகரமான பலன்கள் காணப்படும்.புதிய வேலை வாய்ப்புகள் கிடைக்கும். இது உங்களுக்கு மகிழ்ச்சி அளிக்கும்.

உங்கள் துணையுடன் ஆன்மீக யாத்திரை மேற்கொண்டு மகிழ்வீர்கள். இது கண்டிப்பாக உங்களுக்கு மகிழ்ச்சியை அளிக்கும்.

இன்று நிதி நிலைமையில் ஸ்திரத்தன்மை காணப்படும். நிதி வளர்ச்சி சிறப்பாக இருக்கும். உங்கள் சேமிப்பு கணிசமாக உயரும். பணத்தை பயனுள்ள வகையில் செலவு செய்வீர்கள்.




இன்று விருப்பமான பலன்கள் கிடைக்காது.இதனால் உங்கள் தன்னம்பிக்கை பாதிக்கும். ஆன்மீக சொற்பொழிவு கேட்டல், கோவிலுக்கு செல்லுதல் போன்றவற்றின் மூலம் ஆறுதல் பெறலாம். முக்கிய முடிவுகள் எடுப்பதை தவிர்க்கவும்.

பணியிடத்தில் முன்னேற்றகரமான பலன்கள் காணப்படும். பணிகள் அதிகமாக காணப்படும். குறித்த நேரத்தில் பணிகளை முடிக்க இயலாது.

நீங்கள் உங்கள் துணையிடம் கவனமற்ற வார்த்தைகள் பேசுவீர்கள். இதனால் உறவின் நல்லிணக்கம் பாதிக்கும். மகிழ்ச்சியுடன் இருக்க பேச்சில் கடுமையை தவிர்க்க வேண்டும். உங்கள் துணையுடன் தரமான நேரத்தை பகிர்ந்து கொள்ளவும்.

இன்று அதிக செலவுகள் காணப்படும்.




இன்றைய நாள் நீங்கள் எதிர்பார்த்தபடி இருக்காது. இன்று அதிர்ஷ்டத்தை நம்பி இருக்க இயலாது என்ற காரணத்தினால் “சுய முயற்சியை நம்புங்கள். முக்கிய முடிவுகள் எடுப்பதை தவிர்க்கவும்.

இன்று பணிகள் இறுக்கமாக காணப்படும். ஓய்விற்கு நேரம் இருக்காது. சிறப்புடன் பணியாற்ற திட்டமிட்டு பணி புரிய வேண்டும்.

உங்கள் துணையுடன் ஆரோக்கியமான உறவை பராமரிக்க இயலாது. உறவில் குழப்பம் ஏற்பட வாய்ப்புள்ளது.

நிதிநிலைமை சிறப்பாக இருக்காது. இன்று கூடுதல் செலவு காணப்படும். இது உங்களுக்கு கவலை அளிக்கும்.

இன்று மனதில் அமைதியின்மை காணப்படும். இதனால் பதட்டம் நிலவும். ஆரோக்கியத்தில் கவனம் செலுத்தவும்.




இன்று உங்களுக்கு சாதகமான நாள். வளர்ச்சி காணப்படும் நாள். கடினமான பணிகளையும் இன்று எளிதாக முடிப்பீர்கள். உடல் மற்றும் மன தைரியத்துடன் காணப்படுவீர்கள்.

பணியிடத்தில் உங்கள் திறமைகளை பயன்படுத்துவீர்கள். நீங்கள் பணி செய்யும் பாணி உங்கள் மேலதிகாரிகளின் பாராட்டைப் பெறும்.

உங்கள் துணையுடன் இனிமையான வார்த்தைகளை பகிர்ந்து கொள்வீர்கள். இதனால் இருவரிடையே அன்பு பெருகும்.

பண வரவு தேவையை விட அதிகமாக காணப்படும். சேமிப்பு கணிசமாக உயரும்.

பொதுவாக இன்று ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும். உங்களிடம் இன்று ஆற்றல் நிறைந்து காணப்படும்




இன்று ஆக்கப்பூர்வமான பலன்கள் கிடைக்கும். உங்களிடம் காணப்படும் வலிமை காரணமாக இன்று உங்கள் முயற்சிகளில் வெற்றி காண்பீர்கள். மூத்தவர்களின் ஆதரவு பெறுவீர்கள். அதனால் சிறப்பாக உணர்வீர்கள்.

நீங்கள் சிறந்த முறையில் பணியாற்றுவீர்கள். உங்கள் பணிகளை ஒழுங்கு முறையுடன் மேற்கொள்வீர்கள்.

உங்கள் துணையுடன் அன்பாக நடந்து கொள்வீர்கள். இதனால் உறவில் நல்ல புரிந்துணர்வு காணப்படும்.

இன்று பண வரவு காணும் அதிர்ஷ்டம் காணப்படுகின்றது. உங்கள் வாழ்க்கை தரத்தை உயர்த்திக் கொள்வீர்கள். உங்கள் சேமிப்பு உயரும்.

இன்று உங்களிடம் ஆற்றல் நிறைந்து காணப்படும். உங்கள் ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும்.




இன்றைய நாள் சற்று மந்தமாக இருக்கும். இன்று பாதகமான விளைவுகள் ஏற்பட வாய்ப்புள்ளதால் எந்தச் செயலையும் யோசித்து செய்ய வேண்டும். பொழுதுபோக்கு நிகழ்ச்சிகளில் ஈடுபடுங்கள்.

கவனக்குறைவு காரணமாக பணியில் தவறுகள் நேரலாம். உங்கள் பணிகளை திட்டமிட்டு மேற்கொள்ள வேண்டும்.

குடும்ப பிரச்சினை ஒன்றின் காரணமாக உங்கள் துணையுடன் இனிமையற்ற சூழ்நிலையை சந்திப்பீர்கள். இதனால் இருவரிடையே தவறான புரிந்துணர்வு ஏற்படும்.

நிதி நிலைமை மகிழ்சிகரமாக இருக்காது. தேவையற்ற செலவுகள் காணப்படும். அதனை எதிர்கொள்வது கடினமாக இருக்கும்.




இன்று உங்களுக்கு சாதகமான நாள் அல்ல.இன்று பாதகமான விளைவுகளை தடுக்க யோசித்து முடிவெடுங்கள். இன்று நீங்கள் வீட்டுப் புனரமைப்பிற்காக பணம் செலவு செய்ய நேரலாம்.

சக பணியாளர்களுடன் நல்லுறவு கொள்ள இயலாது. மேலும் பணிகள் அதிகமாக காணப்படும்.

உங்கள் துணையிடம் வெளிப்படையாக உங்கள் உணர்வுகளை பகிர்ந்து கொள்வது நல்லது. இதனால் உறவில் நல்ல புரிந்துணர்வும், மகிழ்ச்சியும் காணப்படும்.

இன்று பண இழப்பு காணப்படும். அஜாக்கிரதை காரணமாக சிறிது பணத்தை இழப்பீர்கள்.

உங்கள் தாயின் உடல் நலத்திற்காக பணம் செலவு செய்ய நேரலாம். இது உங்களுக்கு கவலை உண்டாக்கும்.

# இன்றைய ராசி பலன்கள் -26.09.2023

**தனுசு**

இன்று வளர்ச்சி காணப்படும் நாள். உங்கள் அனைத்து முயற்சிகளிலும் வெற்றி காண்பீர்கள். இன்றைய நாளில் நீங்கள் முக்கிய முடிவுகள் எடுக்கலாம்.

இன்று சுமூகமாக பணிகள் நடக்க உகந்த நாள். உங்கள் பணிகளை திறமையாக மேற்கொள்வீர்கள்.

உங்கள் இனிமையான வார்த்தை மற்றும் நேர்மையான அணுகுமுறை மூலம் உங்கள் துணையை மகிழ்விப்பீர்கள். இதனால் நல்ல புரிந்துணர்வு ஏற்படும்.

இன்று உங்களுக்கு பாராட்டு வகையில் ஊக்கத் தொகை கிடைக்கும். உங்கள் சேமிப்பு ஆற்றல் உயரும்.

இன்று உங்கள் ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும். இன்று வலிமையாக உணர்வீர்கள்.

**கும்பம்**

இன்று சற்று மந்தமான நாளாக இருக்கும். எந்த செயலையும் தொடங்கு முன் யோசித்து செயல்படவும். இன்று கடினமான சூழ்நிலைகளை சந்திக்க நேரும். அதனை கவனமுடன் கையாளவும். முக்கியமான முடிவுகள் எடுப்பதை தவிர்க்கவும்.

உங்கள் எதிர்காலம் குறித்த பயம் காரணமாக பணியிடத்தில் பதட்டம் காணப்படும். நீங்கள் அமைதியாக திறமையுடன் உங்கள் பணிகளை மேற்கொள்ளுங்கள்.

உங்கள் மனதில் அமைதியின்மை காணப்படும். இதனால் உணர்வுகளை பகிர்ந்து கொள்வது கடினமாக இருக்கும்.

வீட்டை புதுப்பிக்க அல்லது புனரமைக்க பணச் செலவு நேரலாம். உங்கள் சேமிப்பு நிலை உயர குறைந்த வாய்ப்பே உள்ளது.

**மகரம்**

இன்று விரும்பும் பலன் கிடைக்க சாத்தியமான நாள் அல்ல. பிறருடன் பேசும்போது கவமாகப் பேச வேண்டும். நண்பர்களை சந்திப்பதை தவிருங்கள். இறைவழிபாட்டில் ஈடுபடுவதன் மூலம் ஆறுதல் பெறலாம்.

அதிக பணிகள் காரணமாக பணியில் தாமதம் காணப்படும்.பணிகளை குறித்தநேரத்தில் மிச்சமின்றி முடிக்க நீங்கள் திறமையாக பணியாற்ற வேண்டும்.

சிறிய விஷயத்தையும் நீங்கள் தீவிரமாக எடுத்துக் கொள்வதன் காரணமாக உங்கள் துணையுடன் சண்டை ஏற்பட வாய்ப்புள்ளது. உங்கள் துணையுடன் நட்பான அணுகுமுறை மேற்கொள்ள வேண்டும்.

பயணத்தின்போது பண இழப்பு ஏற்பட வாய்ப்புள்ளது. எனவே பணத்தை கவனமாகக் கையாள வேண்டியது அவசியம்.

**மீனம்**

இன்று சாதகமான விளைவுகள் கிடைக்காது. இதனால் குழப்பமான மனநிலை காணப்படும். உங்கள் கருத்துக்களை தெளிவாக எடுத்துக் கூற இயலாது. பிறருடன் பேசும்போது கவனம் தேவை.

இன்று தேவையற்ற பயணங்கள் காணப்படும். பணியில் உங்கள் வளர்ச்சிக்கான வாய்ப்பை இழப்பீர்கள்.

உங்கள் துணையுடன் வாக்குவாதத்தில் ஈடுபடுவீர்கள். எதையும் லேசாக எடுத்துக் கொள்வதன் மூலம் உறவில் மகிழ்ச்சி நிலவும்.

பணப்பற்றாக்குறை இன்று உங்களுக்கு கவலையை ஏற்படுத்தும். உங்கள் தேவைகளை பூர்த்தி செய்து கொள்வதை கடினமாக உணர்வீர்கள். சூழ்நிலையைக் கையாள்வதை கடினமாக உணர்வீர்கள். இன்று பண இழப்பிற்கான வாய்ப்பு உள்ளது.

OUR HISTORICAL ACHIEVEMENTS IN JAFFNA
- FACULTY OF BIO SYSTEM TECHNOLOGY UNI. OF JAFFNA - KILINOCHCHI
- CLINICAL TRAINING AND RESEARCH CENTRE FACULTY OF MEDICINE - JAFFNA
- FACULTY OF ENGINEERING UNIVERSITY OF JAFFNA
- COURT COMPLEX AT CHAVAKACHCHERI
- FACULTY OF AGRICULTURAL UNIVERSITY OF JAFFNA
- RDD OFFICE - JAFFNA
- WATER BOARD BUILDING - JAFFNA

Blue Ocean GROUP OF COMPANIES
20+ LOCATED CITIES 235+ CONDO PROJECTS 3500+ CONDO UNITS
KELSEY HOMES 40 Years Housing Excellence

S.Thumilan
Group Chairman
ACA, ACMA (UK), ACCA, CGMA, MCSI (UK), CPA (AUS), FMAAT (SL), ACS

CENTRAL PARK JA-ELA
CENTRAL PARK
15 ACRES LARGEST GATED HOUSING DEVELOPMENT IN JA-ELA
HEAD OFFICE
No. 9A, De Fonseka Place, Bambalapitiya, Colombo 04.
Tel : +94 112 582 582 | Hotline : +94 777 546 546
JAFFNA OFFICE
No. 21/1, Kerathivu Road, Navatkuli, Jaffna.
Mobile : +94 76 690 9949 | Mobile : +94 771 546 539

Northern PC Park

வடக்கின் கணினிப்பூங்கா
கணினி உலகில் நம்பகமான சேவையில் 15 வருடங்களுக்கு மேலாக யாழ் மண்ணில்
#10 Muddaskadai Junction, Stanley Road, Jaffna.
info@pcpark.co www.pcpark.co
Hot Line :- 077 777 1545
077 757 0124 | 075 555 7327 | 021 567 5566 | 021 222 9581
077 336 6443 | 071 777 2377 | 021 222 2050 | 021 222 0388
Northern Pc Park Npcpark northernpcpark Northern PC Park